**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 2024–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது திரு. விடுதலை இராசேந்திரன் அவர்களுக்கு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிநசிபி)த்துறை**

அரசாணை (நிலை) எண். 01

நாள் 08.01.2025
குரோதி, மார்கழி 24
திருவள்ளுவர் ஆண்டு 2055
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 53, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 10.11.1994.
2. அரசாணை (நிலை) எண்.108, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 02.12.2024.

------

ஆணை:

சமூக நீதிக்காகப் பாடுபடுபவர்களை சிறப்பு செய்வதற்காக "சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது" வழங்குவதற்கு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1995–ஆம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது பெறுவோருக்கு ரூ.5,00,000/– (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) விருதுத் தொகையும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படுகிறது. 2024–ஆம் ஆண்டிற்கான இவ்விருது வழங்குவதற்கு திரு. விடுதலை இராசேந்திரன் (க.இராசேந்திரன்) அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

2. 2024–ஆம் ஆண்டிற்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்குவதற்கான செலவுத் தொகையாக ரூ.5,80,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

// ஆளுநரின் ஆணைப்படி //

சா.விஜயராஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன்,
சேப்பாக்கம், சென்னை– 5.

ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலன், சென்னை–5.

முதன்மை தலைமைக் கணக்காயர்,
சென்னை–18.

தலைமைக் கணக்காயர் (A&E),
சென்னை–18
தலைமைக் கணக்காயர் (கணக்குகள் I),
சென்னை–18
தலைமைக் கணக்காயர் (கணக்குகள்II),
சென்னை–18

தலைமைக் கணக்காயர் (CAB),
சென்னை–9

சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை–5.

<u>நகல் :–</u>

முதலமைச்சர் அலுவலகம்,
சென்னை–9.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9.

முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை –9

தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை, சென்னை–9.

நிதித் (பி.மி.பி.) துறை, சென்னை – 9.

இருப்பு கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

08/01/2025

பிரிவு அலுவலர்
08.01.2025